©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 39] CHENNAI, WEDNESDAY, OCTOBER 2, 2013
Purattasi 16, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part III—Section 2

**Statutory Notifications and Orders issued by Heads of Departments.**

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

**CONTENTS**

*Pages.*

**சென்னை மாநகராட்சி**

**வருவாய்த் துறை**

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டத்தின்படி விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிறுமம் வரிவிதித்து வசூலிப்பது குறித்த அறிவிக்கை. .. .. .. .. .. 220-222

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### சென்னை மாநகராட்சி

**வருவாய்த் துறை.**

**சென்னை மாநகர முனிசிபல் சட்டத்தின்படி விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிறுமம் வரிவிதித்து வசூலிப்பது குறித்த அறிவிக்கை.**

*(வ.து.ந.க.எண். தொ.வ.எண். 1420/2012.)*

No. SROC-12/2013.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 110—ன்படி சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்படும் அரையாண்டு நிறுமம் வரி (Company Tax)யினை விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் விதித்து வசூலிப்பது குறித்து சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, பிரிவு 98A—ன்படி இந்த அறிவிக்கை செய்யப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள அரையாண்டு நிறுமம் வரியானது இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு சென்னை மாநகராட்சியினால் பரிசீலிக்கப்படவுள்ளது. எனவே, இது குறித்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சென்னை மாநகராட்சியினால் 30 நாட்களுக்குள் பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்படும்.

இப்பொருள் குறித்து ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அதனை ஆணையர், சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை—600 003 என்ற முகவரிக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்**

**(மண்டலம்—1, 2, 3, 7, 11, 12, 14 மற்றும் 15)**

**நிர்ணயிக்கப்படவுள்ள நிறுமம் வரியின் விகிதங்கள்**

**(சென்னை மாநகராட்சி எல்லைக்குள் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்கள்)**

| *வ.எண்* | *சராசரி ஆண்டு முதலீடு தொகை (இலட்சங்களில்)* | *அரையாண்டு நிறுமம் வரி* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | ஒரு இலட்சத்திற்கு குறைவாக (ரூ. 99,999—க்குள்) | ரூ. 100/— |
| 2. | ரூபாய் 1,00,000 முதல் ரூபாய் 1,99,999—க்குள் | ரூ. 200/— |
| 3. | ரூபாய் 2,00,000 முதல் ரூபாய் 2,99,999—க்குள் | ரூ. 300/— |
| 4. | ரூபாய் 3,00,000 முதல் ரூபாய் 4,99,999—க்குள் | ரூ. 400/— |
| 5. | ரூபாய் 5,00,000 முதல் ரூபாய் 9,99,999—க்குள் | ரூ. 500/— |
| 6. | ரூபாய் 10,00,000க்கு மேல் | ரூ. 1,000/— |

இருப்பினும், ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரத்தில் இல்லாமல் இருந்தால் அந்நிறுவனம் ஈட்டும் மொத்த வருமானம் அல்லது சென்னை மாநகரில் இயங்கும் கிளை நிறுவனத்திலிருந்து ஈட்டப்படும் முந்தைய நிதியாண்டின் மொத்த வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிறுமம் வரி செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண் | நிறுவனத்தின் மொத்த வருமானம் | அரையாண்டுக்கு செலுத்த வேண்டிய நிறுமம் வரி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) | ரூ. 5,000/—க்கு மிகாமல் | ரூ. 25/— |
| (ஆ) | ரூ. 5,001/— முதல் ரூ.10,000/— வரை | ரூ. 50/— |
| (இ) | ரூ. 10,001/— முதல் ரூ.20,000/— வரை | ரூ. 100/— |
| (ஈ) | ரூ. 20,000/—க்கு மேல் | ரூ.100/— மற்றும் 20,000—க்கு மேல் கூடுதலாக உள்ள தொகைக்கும் ஒவ்வொரு ரூ.5,000—க்கும் ரூ.25/—வீதம் அதிகபட்சம் ரூ.1,000/— |

இருப்பினும், ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரில் இல்லாமல் இருந்தாலும் சென்னை நகரில் இயங்கும் கிளை நிறுவனத்திற்கு முதல் ஆண்டிற்கு நிறுமம் வரி ரூ.25/— செலுத்தப்பட வேண்டும். ஆனால் அந்நிறுவனத்தின் மொத்த வருமானம் அந்த ஆண்டில் ரூ.5,000/—க்கு மிகையாக இருப்பதாகக் கண்டறியப்பட்டால் அந்நிறுவனம் மேலே அட்டவணையில் குறிப்பிட்ட விகிதத்தின்படி முதலில் செலுத்திய ரூ.25/—ஐ கழித்து மீதமுள்ள தொகை செலுத்தப்பட வேண்டும்.

சென்னை—600 003,
2013 செப்டம்பர் 24.

**விக்ரம் கபூர்,**
*முதன்மை செயலர்/ஆணையர்,*
*சென்னை மாநகராட்சி.*

**CORPORATION OF CHENNAI**

NOTIFICATION

*(R.D.C.No.PT/001420 /2012.)*

The Corporation of Chennai is Collecting Company Tax as per the provisions of Section 110 of Chennai City Municipal Corporation Act, 1919. Now, as per the provision under Section 98-A of the CCMC, Act 1919. it is proposed to levy Company Tax in extended areas of Corporation of Chennai.

The proposed half year Company Tax would be taken for consideration by the Chennai Corporation after 30 days from the day of publication. Hence any objection in this regard would be received within 30 days for consideration.

Objections if any, should be addressed to the Commissioner, Corporation of Chennai, Ripon Building, Chennai-600 003.

**Half yearly Company Tax to be implemented in the extended areas**

**(Zone 1, 2, 3, 7, 11, 12, 14 and 15) of the Corporation of Chennai)**

**Proposed rate of Company Tax—Companies having head office within the Limit of the Chennai Corporation**

| *Sl.No.* | *Paid up Capital* | *Half yearly Company Tax Rs.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Below Rs. 1,00,000/- (upto Rs. 99,999/-) | 100/- |
| 2. | Rs.1,00,000/- Rs.1,99,999/- | 200/- |
| 3. | Rs.2,00,000/- Rs.2,99,999/- | 300/- |
| 4. | Rs.3,00,000/- Rs.4,99,999/- | 400/- |
| 5. | Rs.5,00,000/- Rs.9,99,999/- | 500/- |
| 6. | Above 10,00,000/- | 1,000/- |

Provided that for any company, the head or a principal office of which is not in the city and which shows that its gross income received in or from the city in the year immediately preceding the year of taxation, the following is to be implemented:

**Companies having Head office outside the Corporation of Chennai Limit**

| *Sl.No.* | *Gross income in the Compoany* | *Half yearly Company Tax* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | Has not exceeded Rs.5,000/- | Rs. 25/- |
| 2 | Rs. 5,001/- to Rs.10,000/- | Rs. 50/- |
| 3 | Rs. 10,001/- to Rs.20,000/- | Rs.100/- |
| 4 | Above 20,000/- | Rs.100/- and if exceeds Rs.20,000/- at the rate Rs.25/- for per every 5,000/- subject to Maximum Rs.1,000/- |

The Companies who do not have their head or principal office in Chennai City are also liable to pay the tax for first year at Rs.25/- but if the gross income of the Company during such year is subsequently found to have exceeded Rs.5,000/- they shall pay the tax as calculated in accordance with the above mentioned scale less the initial payment of Rs.25/-.

Chennai-600 003,
24th September 2013.

VIKRAM KAPOOR,
*Principal Secretary / Commissioner,*
*Corporation of Chennai.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU